

தமிழக அரசின் "நான் முதல்வன் திட்டம் மூலம் படித்து குடிமைப் பணித் தேர்வான ஐ.ஏ.எஸ் தேர்வில் தமிழக அளவில் 7வது இடம் பிடித்த சின்னாளபட்டியைச் சேர்ந்த மாணவர் அருண்பாண்டியன், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார். அருகில் அருண்பாண்டியன் பெற்றோர் நடராஜன் – தமிழ்ச்செல்வி ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்டம் தி.மு.க. கிழக்கு தொகுதி கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கோபாலகிருஷ்ணன், மாவட்ட அவைத்தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் சோம சுந்தர பாண்டியன், தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் நேருபாண்டியன், மாவட்ட துணை செயலாளர்கள் ஆசைக்கண்ணன், ரோகினி பொம்ம தேவன், ஒன்றிய செயலாளர்கள் அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், மதிவாணன், ஹக்கிம், பகுதி செயலாளர்கள் பெ.சசிகுமார், மருதுபாண்டியன், பாண்டியராஜா, கவுரிசங்கர், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அண்ணாமலை, வீரராகவன், மீரஜான், விநோத், மருதுராஜா, ராஜவேல், மாநகராட்சி கொரடா துரைப்பாண்டியன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.

### எடப்பாடியின் நாடகம் மக்களிடம் எடுபடாது!

# தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும்!

## முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி!

தேனி, மார்ச். 27–



தேனி வடக்கு மாவட்டம்போடி தொகுதி சுப்புராஜ் நகரில் உள்ள முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அ.தி.மு.க. தலைமையில் அமைக்கப்பட்டுள்ள கூட்டணி பா.ஜ.க. கூட்டணி அது. அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி அல்ல அ.தி.மு.க. கூட்டணி என்றால் அதில் கூட்டணி சேர்ந்துள்ள கட்சிகள் அ.தி.மு.க. சின்னத்தில் தான் போட்டி யிட வேண்டும் . ஆனால், பல கட்சிகள் பா.ஜ.க. சின்னத்தில் போட்டியிடுகின்றனர். இதிலிருந்து அந்த கூட்டணி பா.ஜ.க. கூட்டணி என்பது தெளிவாகிறது.

அ.தி.மு.க. மீது கடும் விமர்சனம் செய்கிறீர்கள் அ.தி.மு.க. தொண்டர்களை தி.மு.க.விற்கு அழைப்பதற்கான முயற்சியா எனக்கேட்டபோது , அ.தி.மு.க.வில் தொண்டர்கள் எங்கே இருக்கிறார்கள் ஜெயலலிதா இறந்ததும் லட்சக்கணக்கான தொண்டர்கள் தி.மு.க.வில் இணைந்து விட்டனர். தற்போது, நான் தி.மு.க.வில் இணைந்த பிறகு திருமங்கலத்தில் நடந்த இணைப்பு நிகழ்ச்சியில் லட்சக்கணக்கான தொண்டர்கள் தி.மு.க.வில் இணைந்து விட்டனர் இப்போது அ.தி.மு.க.வில் தொண்டர்களே இல்லை என்றார்.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் மக்களுக்கு தேவையான திட்டங்கள் நீண்ட கால திட்டங்கள் குறித்த தேர்தல் அறிக்கையில் வரும் தி.மு.க. தேர்தல் அறிக்கை வந்ததும் எதிர் க்கட்சிகள் துண்டை காணோம் துணிய காணோம் என்று ஓடத்தான் போகிறார்கள் .

சசிகலாவும் டாக்டர் ராமதாசும் இணைந்து இருப்பது தி.மு.க.வுக்கு எந்த பாதகத்தையும் ஏற்படுத்தாது.

தி.மு.க.விற்கு போட்டி த.வெ.கா. என விஜய் கூறி வருவது குறித்து கேட்டபோது இன்றைய சூழலில் தி.மு.க.விற்கு போட்டியாக யாரும் இல்லை. தா.வெ.க. முதலில் கொ ள்கையை அறிவிக்க வேண்டும் அந்த கொள்கையை நிறைவேற்றுவது குறித்து மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தி.மு.க. அரசு மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து அதனை மக்கள் கைகளில் கொண்டு போய் சேர்த்து இருக்கிறது .

ஆயிரம் ரூபாய் உரிமை தொகை என்றது அது இன்றைக்கு மக்களின் கைகளில் கொண்டு போய் சேர்க்கப்பட்டுள்ளது. விடியல் பயணம் போன்ற திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லியதும் போக சொல்லாத திட்டங்களும் இன்றைக்கு நிறை வேற்றப்பட்டு மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

அ.தி.மு.க. சொன்னதை செய்வது கிடையாது நாடாளுமன்றத் தேர்தலில் மதுக்கடையை அடைப்போம் என்று எடப்பாடி பழனிசாமி கூறினார். அவர் பேசுவதெல்லாம் பொய் 2020 ஆம் ஆண்டு கொரோனா நோய் தொற்று ஏற்பட்ட போது 146 நாட்கள் மதுக்கடைகள் அடைக்கப்பட்டு இருந்தது மக்களும் மதுவை அருந்துவதை மறந்து பழக்கப்பட்டனர் அப்போது அவர் மதுக்கடைகளை தொடர்ந்து மூடி இருக்கலாமே மதுக்கடையில் மீண்டும் எதற்காக திறந்தார் மது கடை மூட வேண்டும் என்று அவர் சொல்வதெல்லாம் பொய்.

எப்படியாவது பத்து தோல்விகளை மறை க்க வேண்டும் என்பதற்காக எடப்பாடி பழனிசாமி புளுகு மூட்டைகளை அவிழ்த்து வருகிறார் .

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு குறித்து கேள்வி எழுப்பிய போது

ஜனநாயக நாட்டில் ஆங்காங்கே ஒரு சில தவறுகள் நடப்பது வழக்கம் அது போன்ற சமயங்களில் திமுக அரசு உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளுக்கு தண்டனைகளையும் பெற்றுத் தந்து சட்டம் ஒழுங்கை காட்டுகிறது எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் இருக்கும் போது தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தை தொலைக்காட்சியில் பார்த்ததாக கூறி பொய் சொன்னவர்

டி.டி.வி. தினகரன் அ.தி.மு.க.வுடன் இணைந்து செயல்படுவது குறித்த கேள்விக்கு டிடிவி தினகரன் எடப்பாடி பழனிசாமியும் ஒரு வரை ஒருவர் மாறி மாறி 420 என கூறிக் கொண்டவர்கள் ,இன்றைக்கு ஒன்று சேர் ந்திருக்கிறார்கள் இவர்கள் சேர்ந்து இருப்பது ஒரு நாடகம் இந்த நாடகத்தை நம்பா தீர்கள் . உரிமை மீட்பு குழு நடத்திய போது கொடநாடு கொலை வழக்கு குறித்து நடவடிக்கை எடுக்க சொல்லி போராட்டம் நடத்த ப்பட்டது அப்போது யார் ஆட்சியில் ' இருந்தார் என்பது மக்களுக்கு தெரியும் இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்

இப்ப உங்கள் சார்பில் எத்தனை சீட்டு கேட்டிருக்கீங்க? உங்களுக்கு எத்தனை சீட் கொடுப்பார்கள்?

கேள்வியே தவறானது. நாங்கள் அனைவரும் திராவிட முன்னேற்ற கழகம் என்று ஒரே கட்சியில் தான் பய ணித்துக்கொண்டு இருக்கிறேன். தி.மு.க. தேர்தல் அறி க்கை வந்திருக்கு. அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை வந்திருக்கு. அதனுடைய நம்பகத்தன்மையை நீங்க எப்படி சார் பாக்குறீங்க?

இதுவரை பழனிச்சாமி சொல்லி இரு க்கின்ற கருத்துக்கள் எதுவுமே நம்பகத் தன்மை இல்லாதது என்பது தான் நன்றாக இருக்கிறது.

அவர் ஒரு ஆளுமை மிக்க அரசியல் தலை வர் இல்லை. 2015ல் ஆர்.கே .நகர் இடைத் தேர்தல். இன்று நடந்து முடிந்த 2024 நாடா ளுமன்றத் தேர்தல் வரை பத்து தேர்தல்க ளில் அவர் தோல்வியைத் தழுவி இருக்கிறார்.

ஒரு ஆளுமைமிக்க தலைவர் என்று சொ ன்னால், ஒரு சட்டமன்ற தேர்தலில் அது நா டாளுமன்ற தேர்தலில் தோல்வியைத் தழு வினால், அடுத்த தேர்தலில் எந்த தேர்தல் வந்தாலும் அந்த கட்சியை தூக்கி நிலை நிறுத்தி வெற்றி பெறுவதுதான் ஆளுமை மிக்க தலைவராக இருக்க முடியும் அதுவே தமிழக அரசியல் என்ற நிலைப்பாடு வரலாறு,அது எடப்பாடி பழனிச்சாமி இல்லை என்பது நிரூபணம்.

ஆகவே அவர் ஆளுமை மிக்க தலைவராக இல்லை என்ற காரணத்தினால் தொடர்ந்து தோல்வியை பத்து தேர்தல்களில் நா டாளுமன்ற தேர்தல், சட்டமன்ற தேர்தல், இ டைத் தேர்தல்கள் இப்படி அனைத்து தேர்தல்களில் பழனிச்சாமி படு தோல்வி. பழனிச்சாமி தான் அரசியல் நிலை கொ ண்டு இருக்கும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

பழனிச்சாமி இன்று வெளியிட்ட தேர்தல் அறிவிக்கை பொய்யான அறிக்கை. அதை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்ற மனநிலையில் தான் இருக்கிறேன்.

நீங்கள் கடந்த காலங்களில் பழனிசாமி சொன்ன எதையாவது நிறைவேற்றி இ ருக்கிறார் என்பதை ஆராய்ந்து உண்மைத்தன்மையை மக்களுக்கு சொல் ல வேண்டும்.

தி.மு.க.வின் தொண்டனாகவே இருந்திருக்கிறேன். கழகத் தலைவர் அவர்கள் வேட்பாளர் பட் டியல் வெளியிடும் போது யாரெல்லாம் வே ட்பாளர் பட்டியல் இடம் பெற்றிருக்கி றது? அவர் தான் முடிவு செய்வார்.

இப்போதைக்கு மக்கள் சுற்றுப் பயணம் தென்மாவட்டங்களில் 58 தொகுதியில் இருக்கிறது. இந்த ஐம்பத்தெட்டு துறையிலும் திராவிட முன்னேற்ற கழகம் மா பெரும் வெற்றி அடையும். மக்களின் அமோக ஆதரவு இருக்கிறது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச் சாமி இன்னைக்கு நடந்த செய்தியாளர் சந்திப்பில் 20 தொகுதிகளில் வெல் வோம் என்றுள்ளார்.

அ.தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று சொல்லியிருக்கிறார். நான் ஏற்கனவே சொன்னேன். 2017 ல் நடந்த ஆர்கே நகர் சட்டமன்ற இடைத் தேர்தலில் இருந்து இது வரை அவர் எந்த தேர்தலிலும் வெற்றி பெ ற்று இருக்கிறாரா? ஆக ஆளுமைத் திறன் கொண்ட தலைவராக எடப்பாடி பழனிச்சாமி இல்லை.

மக்கள் அதை நம்ப வேண்டாம் என்று தான் சொல்கிறேன்.

உங்களுக்கும் நல்லாவே தெரியும்.

நான் போடி சட்டமன்ற தொகுதியில் 2010ல் முதன்முதலாக தேர்தல் களத்தில் சொன் ன வாக்குறுதிகள் ஒன்றைத்தவிர எல்லா மே நிறைவேற்றி இருக்கிறது.

டாப் ஸ்டேஷனுக்கு ரோடு போட பர்மிட் அ றிவித்துள்ளது. அது மட்டும் தான் இல் லை. ஏன் என்று சொன்னால் அதன் பாதை செங்குத்தான மலைப்பகுதியில் இரு ந்ததால் மூன்று நான்கு சர்வேக்கள் நடத் தப்பட்டது. ரோடு ஒரு பெரிய வசதிகள் இல்லை.

அதனால் தான் அந்தக்காலத்திலேயே ரோப் கார் மூலமாக தேயிலை ஏற்றுவதும் இறங்குவதுமாக இருந்தது.

ஆகவே இங்கே சொல்லப்பட்டு இருக்கின்ற சொல்லப்படாத அனைத்து. போடி சட்டமன்ற தொகுதியில் இருக்கின்ற அனைத்து பிரச்சினையும் தீர்த்து வைக்கி றேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கனவே மாம்பழ கூழ் தொழிற்சாலை வருவது குறித்து ஆயத்தமான அடிப்படை ஆய்வுகளை மேற்கொண்டோம்.

அந்த ஆய்வுகளின் அடிப்படையில் 50 சதவீதம் மானியம் அரசின் மூலமாக தருவதாகவும் சொன்னேன். பல மாந்தோப்பு விவசாயிகள் முன்வந்தார்கள். வியாபாரிகள் முன்வந்தார்கள். ஆனால் நம்முடைய மாம்பழம் நீர்ச்சத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் தயாரிக்கிற பக்கு வம் இன்னும் வரவில்லை என்று சொன் னார்கள்.

ஆகவே எதிர்காலத்தில் அதையெல்லாம் நிவர்த்தி செய்து இந்த மாம்பழம் கூழ் மீண்டும் நிறுவதற்கான ஆயத்தப் பணிகளை நாம் உறுதியாக செய்வோம்.

போடிநாயக்கனூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லை. பாதாள சாக்க டைத் திட்டம் கொண்டுவந்தால் அதிகமா ன தண்ணீர் தேவைப்படுகிறது.

ஏற்கனவே இருக்கின்ற குடிநீர் ஆதாரம் கொட்டக் குடி ஆற்றில் இருந்து சுத்தரிக் கப்பட்ட போடி நகராட்சிக்கு தந்து கொண்டிருக்கிறார்கள்.

பாதாள சாக்கடைஇருக்கிற 15 லட்சம் வீடு களுக்கு இணைப்பு கொடுக்க வேண்டும் என்றால், ஒரு வீடுக்கு ஏழு லிட்டர் தண்ணீ ர் தேவைப்படுகிறது. இதையெல்லாம் கணக்கிட்டு பார்க்கும் போது அதிகமான தேவை, என்று நாங்கள் பல ஆய்வுகளை கட்டக்கூடிய தடுப்பணைகளை எத்தனை கட்டலாம் என்று ஆய்வுகள் மேற் கொண்டோம்.

தடுப்பணை கட்டினால் எவ்வளவு தடுப்பணை கட்டினாலும் வேகம் காட்டக்கூடிய ஆற்றலுடைய வேகம் மிகவும் அதிகமாக இருக்கும்.

தடுப்பணை தடுக்கும் என்று ஒரு சூழல் இருக்கிற காரணத்தினால் மாற்று ஏற்பாடாக முல்லைப் பெரியாறில் இருந்து தடுப்பணை எடுத்து குழாய் மூலமாக கொண்டு வரப்பட்டு நகராட்சியில் சேர்க்கப்பட்டுள்ளது.

எடப்பாடியின் தினகரனும் சேர்ந்து நடத்தும் நாடகம் பொது மக்களிடையே எடுபடாது அ.தி.மு.க. கூட்டணி இல்லை பா.ஜ.க. கூட்டணி என்று தான் சொல்ல வேண்டும்.

எடப்பாடி –தினகரனின் நாடகம் மக்கள் மன்றத்தில் எடுபடாது தி.மு.க. அமோக வெற்றி பெறும்.

இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேட்டியளித்தார்.

### புல்லட் ரயில் அறிவிப்பில் தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிப்பு!

# ஒன்றிய அரசின் எதேச்சதிகாரப் போக்கிற்கு தமிழ்நாட்டு மக்கள் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 27-



தமிழ்நாடு உட்பட நாடு முழுக்க அறிவிக்கப்பட்டுள்ள புல்லட் ரயில் திட்டங்களின் முக்கிய விவரங்களைக் கேட்டு, நாடாளு மன்றத்தில் ரயில்வே அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதற்கு கிடைத்தி ருக்கும் பதில்கள், தமிழ்நாட்டின் தேவைகளை சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

மஹாராஷ்டிரா, குஜராத், உத்தரப்பிரதேச மாநிலங்களுக்கு அதிக முக்கி யத்துவம் கொடுக்கப்படும் நிலையில், நாட்டிற்கு அதிக வரித் தொகையை செலுத்தும் தமிழ்நாடு இப்படி புறக்கணிக்கப் பட்டிருப்பது, ஒன்றிய பா.ஜ.க அரசின் எதேச்சதிகாரத்தையும் தமிழ் மக்களின் மீதான பாரபட்சத்தையும் காட்டுகிறது.

**1. ரயில்வே திட்டங்களில் தமிழ்நாடு மீது தொடரும் பாரபட்சம்:**

ரயில்வே திட்டங்களில் தமிழ்நாடு புறக்கணிக்கப் படுவது புதிய விவகாரம் அல்ல. இந்த ஆண்டு ரயில்வே பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு மொத்தமாகவே 7000 கோடி ரூபாய் என்ற குறைவான தொகையே ஒதுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் சார்பில் முன்வைக்கப்பட்ட புதிய ரயில் வழித்தடங்கள், ஏற்கனவே இருக்கும் வழித்தடங்களில் கூடுதல் ரயில்கள், ரயில் நிலையங்களின் மேம்பாடு போன்ற பல முக்கியக் கோரிக்கைகள் கிடப்பில் போடப்பட்டன.

எனது தொகுதியான ஈரோட்டின் ரயில்வே தேவைகள் குறித்து, ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகிறேன்.

இவற்றில் தொடர் அழுத்தத்திற்கு பணிந்து சில கோரிக்கைகளை ஒன்றிய அரசு நிறைவேற்றுவ தாக ஒப்புக் கொண்ட நிலையில், பல கோரிக்கைகள் இன்னும் கவனத்தில் கொள்ளப்படாமலேயே இருக்கின்றன.

இதன் அடுத்தகட்டமாக, புல்லட் ரயில் திட்டங்களிலும் தமிழ்நாட்டின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

**2. மகாராஷ்டிராவிற்கு ஒரு நியாயம், தமிழ்நாட்டிற்கு ஒரு நியாயமா?**

மஹாராஷ்டிராவில் ஏற்கனவே மும்பை அகமதாபாத் புல்லட் ரயில் சேவை பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் தற்போது மும்பை புனே புல்லட் ரயிலும் அந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக புல்லட் ரயிலில் Interstate தன்மைக்கே முன்னுரிமை அளிக்கப்படும் சூழலில், மஹாராஷ்டிராவிற்கு மட்டும் அந்த விதி தளர்த்தப்பட்டு Intrastate ரயில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களின் முக்கிய நகரங்களை இணைக்க, பல ஆண்டுகளாக புல்லட் ரயில்கள் கேட்கப்பட்டு வருகின்றன. ஆனால், இது பற்றி எந்த அக்கறையும் காட்டாமல், மஹாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களுக்கு அனைத்தையும் ஒதுக்கி, தமிழ்நாட்டை கைவிட்டிருக்கிறது ஒன்றிய அரசு.

**3. முதலமைச்சரின் தலைமையில் 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்':**

தமிழ்நாடு முதலமைச்ச ரின் தலைமையில், தமிழ்நாடு மாநிலம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. ஜிடிபி, தனி நபர் வருமானம், தொழில் வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து அலகுகளிலும் அவரது சாதனைகள் வரலாற்றை மாற்றி எழுதிக் கொண்டிருக்கின்றன. இதற்கு ஊடகங்களும், அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளும், ஒன்றிய அமைச்சகங்களும் வெளியிடும் தரவுகளே சாட்சி.

ஒன்றிய அரசின் எதேச்சதிகாரத்தை முறியடித்து தமிழ்நாட்டிற்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்வதில் புகழ்பெற்ற அவர், ரயில்வே திட்டங்களிலும் ஒன்றுவிடாமல் கொண்டுவந்து சேர்ப்பார். அவர் தலைமையில் "தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்".

வரும் தேர்தலில், தமிழ்நாட்டை புறக்கணித்து மகிழும் ஒன்றிய பா.ஜ.க அரசிற்கு தக்க பாடம் புகட்டுவோம்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.



அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (25–3–2026) பத்திரிகையாளர் ரவீந்திரன் துரைசாமி அவர்களின் தந்தை ஸ்ரீகிருஷ்ணன் அவர்கள் மறைவடைந்ததையடுத்து அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த திருவுடலுக்கு மாலை அணிவித்து, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், வட்டக் கழக செயலாளர் கோவிந்தராஜ் உள்ளிட்டோர் உள்ளனர்.